02.07.2025 **OS.276/2016** வா.சா.1–தேவதாஸ்

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u> –

சர்வே எண்.344/5 ல் மொத்தம் 1 ஏக்கர் 32 சென்ட் இருந்தது என்றும், அதில் வடபக்கம் 80 சென்ட் மோசைநாடார், பால்நாடார் அவர்களுக்கும், தென்பக்கம் 52 சென்ட் சண்முகம்பிள்ளை அவர்களுக்கும் உரிமைப்பட்டு, மேற்படியாரின் பெயரில் கூட்டு பட்டாவாக எண்.409 ஆக இருந்தது என்றால் சரிதான். கூட்டு பட்டா எண்.409 ஐ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்திருக்கிறேன். வழக்கு சொத்திற்கு கிழக்கு பக்கம் ஆதியில் முத்துபுதியநாடாருக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.344/4 அமைந்துள்ள சொத்து இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண்.341 ல் கீழ்புறம் இராமசாமி நாடாருக்கு உரிமைப்பட்ட சொத்தும், அதற்கடுத்த கீழ்புறம் 342/2 ல் எம்.கே.வி கந்தசாமி நாடார் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தும் இருந்தது என்றால் சரியல்ல. சர்வே எண்.340 ல் ஆறுமுகப்பாண்டி நாடாருக்கு உரிமைப்பட்ட சொத்து இருந்தது என்றால் சரிதான். தற்போது சர்வே எண்.344/5 ல் அடங்கிய சொத்தானது, 344/5 ஏ மற்றும் 344/5 பி என்று பிரியவில்லை. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களைத் தவிர வழக்கு சொத்தைப் பொறுத்த கிரையப்பத்திரங்கள், பட்டா ஆகியவைகள் என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளோம். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களில் சொத்து விபரத்தில் எல்லை விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பின்பு, நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் போது, வழக்கு சொத்திற்கு வழங்கப்பட்ட பட்டா எதுவும் என் கைவசம் உள்ளதா? என்றால் என்கைவசம் இல்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஸ்டேட்மெண்ட்டில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா? என்றால் தெரியும். வழக்கு சொத்தில் கீழோரம் தென்வடலாகவும், வடக்கு பக்கம் கீழ் ஓரம் கிழமேலாகவும் பாதை செல்கிறது என்றால் சரிதான். அந்த பாதையில் பஞ்சாயத்திலிருந்து தார் ரோடு போடப்பட்டிருக்கிறதா? என்றால் போடவில்லை. அந்த பாதையை நான் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த பாதையை கந்தசாமி நாடார் மகன் கணேசன் என்பவர் இதர நபர்களுடன் சேர்ந்து வேறு சொத்துக்களையும் சேர்த்து பொதுநடைபாதை வகைக்காக எழுதிக்கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் எழுதிக்கொடுக்கவில்லை. அவர்கள் செய்து கொண்ட பொது பாதை ஒப்பந்தம் குறித்து எனக்கு தெரியாது. அந்த பொது நடைபாதை ஒப்பந்தமானது, 24.12.1991ம் நாளன்று எழுதப்பட்ட விபரமானது எதிர் வழக்குரையில் கூறப்பட்டுள்ளது. அதற்கு நான் நகல் எடுத்து பார்க்கவில்லை. தற்போது, அந்த இடத்தில் மின்சாரவாரியத்திலிருந்து மின் கம்பங்கள் நடபட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாதையானது, குலசேகரப்பட்டி ஊராட்சியிலிருந்து பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது என்றால் சரிதான். எங்களது வழக்குரை 1ம் தபசில் சொத்தானது, இந்த பாதைகளை கழித்து தான் மீதமுள்ள பரப்பளவு காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் சொத்து விபரத்தில் 4 பக்கமுள்ள சர்வே எண்கள் அவைகளின் உடைமையாளர் குறித்த விபரங்கள் எல்லைகளாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அந்த எல்லை விபரங்கள் தவறானது.

நான் வழக்கு சொத்தினுடைய 4 பக்கங்களிலும் என்ன சர்வே எண்கள் உள்ளது? அது யாருக்கு பாத்தியப்பட்டது? என்ற விபரங்களை வருவாய்த்துறை அலுவலகத்தில் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. இந்த விபரங்களை தெரிந்து கொள்ளாமல், பிரதிவாதிகள் கூறியுள்ள எல்கை விபரங்கள் தவறானது என்று நான் சொல்வது சட்டப்படி ஏற்றுக்கொள்ளதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தானது, பாதையோடு சேர்த்து 76 செண்ட் தான் உள்ளது. வழக்கு சொத்தின் தென்புறம் செல்லையா கண்காணிக்கு உரிமைப்பட்ட சொத்து உள்ளது. அதற்கு முன்பு யாருக்கு அந்த சொத்து பாத்தியப்பட்டிருந்தது என்பது எனக்கு தெரியாது. இது சம்பந்தமான விபரங்களை 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் சொல்லயுள்ளார்களா? என்றால் சொல்லியுள்ளார்கள். ஆனால், அவர்கள் எதிர் வழக்குரையில் தவறாக சொல்லியுள்ளார்கள். சர்வே எண்.347/5 ல் அடங்கிய சொத்தானது, அதன் உடைமையாளர்களான மோசை நாடார் மற்றும் பால் நாடார் ஆகியோர்கள் சீனிவாச நாடார் குமார் யோவான் நாடார் அவர்களுக்கு 30.03.1943 ம் தேதிய கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்து விட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த சொத்தை கிரையம் கொடுக்கவில்லை. வேறு சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ளார். இந்த ஆவணத்திற்கு நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் நகல் எடுத்து பார்த்துள்ளேன். அந்த கிரைய ஆவணத்தில் கண்டுள்ள தபசில் சொத்துக்களுக்கு எல்கைகள் கொடுக்கப்பட்டுள்ளது. அதை நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். சர்வே எண்.345/5 ஏயில் அடங்கியுள்ள சொத்திற்கு கொடுக்கப்பட்ட எல்கைகளை படித்து பார்த்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த எல்கைகள் சரியானது தான். அந்த பத்திரத்தின் கீழ் வழக்கு சொத்தை

கிரையம் கொடுக்கும் போது, சரியாகத் தான் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த ஆவணத்தில் சர்வே எண்.344/5 ஏ சரியாக கொடுக்கப்படாமல் சர்வே எண் தவறாக கொடுக்கப்பட்டிருப்பதை வைத்து நாங்கள் மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. யோவான் நாடார் அவர்களின் வாரிசுகளிடமிருந்து எம்.கே.வி கந்தசாமி நாடார் அவர்கள் இந்த வழக்கு சொத்தான சர்வே எண்.344/5 ஏ சொத்தை 23.12.1972 ம் தேதிய கிரையபத்திரத்தின் படி, கிரையம் பெற்று அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எம்.கே.வி கந்தசாமி நாடார் இறந்த பின்னர் மேற்குறிப்பிட்ட சொத்தானது, அவர்களது வாரிசுகளுக்கு கிடைக்கப்பெற்று அவர்கள் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. ஆனால், மேற்படி சொத்திற்குரிய பட்டாவானது, எம்.கே.வி கந்தசாமி நாடார் அவர்கள் பேரில் ஏற்பட்டு விட்டது. ஆனால் அது தவறாகும். இது சம்பந்தமாக ஆட்சேபனை மனுக்களை நான் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தாசில்தாரர் அவர்களிடம் கொடுத்துள்ளேன். அந்த மனுக்களின் பெயரில், இந்த வழக்கு நிலுவையில் இருப்பதினால் உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் கொடுத்த ஆட்சேபனை மனுவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் போது, முறையான விசாரணைக்கு பின்னர் வழக்கு சொத்திற்கு அதன் உடைமையாளரான எம்.கே.வி கந்தசாமி நாடார் பெயருக்கு ஏற்பட்ட காரணத்தினால் தான், அதை நான் தெரிந்து கொண்டு வழக்கு சொத்தில் எங்களுக்கு உரிமையில்லாத காரணத்தினால் தான் ஆட்சேபனை மனு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எம்.கே.வி கந்தசாமி நாடார் அவர்களின் வாரிசுகளுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் வழக்கு

சொத்தானது, அவரது குமாரரான கணேசன் அவர்களுக்கு கிடைக்கப்பெற்று, அவர் அனுபவம் செய்து வந்து, பின்னர் அவரது வாரிசுகள் 1 முதல் 3 பிரதிவாதிகள் கிரையம் பெற்று அவர்கள் பெயரில் பட்டா பெற்று அனுபவம் செய்து வருகின்றார்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தைப் பொறுத்த முன் ஆவணங்களில் சொத்து விபரங்களில், சர்வே எண் தவறாக, எழுத்துப் பிழையாக எழுதப்பட்டதை வைத்து நாங்கள், எங்களுக்கு உரிமைப்படாத வழக்கு சொத்தில் வேண்டுமென்றே தவறாக உரிமைகோரி, இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு தென்காசி – திருநெல்வேலி சாலையிலிருந்து பாதை வடக்கிலிருந்து வருகிறது. இந்த சொத்தின் மதிப்பு தற்போது கூடிவிட்ட காரணத்தினால், அதனை கைப்பற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த பாதையானது, எம்.கே.வி கணேசன் சாலை என பெயரிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த பாதையின் பெயர் கோமாளி ரோடாகும். இந்த வழக்கிற்காக நான் இதை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தில் எனக்கும், இதர வாதிகளுக்கும் எந்தவொரு உரிமையும் கிடையாது என்றும், வழக்கு சொத்தானது பாவூர்சத்திரம் வணிகர்கள் சங்கத்திற்கு உரிமைப்பட்டது என்றும், இதனால் நாங்கள் கோரியிருந்த பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நியமனம் செய்யப்பட்ட வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. (ஒம்)ஏ.பிஸ்மிதா

கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.